# பாடம் ஏழு

# நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

## <u>பெற்றோர்களுக்கான  நற்குணங்கள் ;</u>

*** குடும்பத்தில் உள்ள அனைவரையும் நேசித்தல் வேண்டும் .**

*** மற்றவர்களுக்கு உதவும் குணம் இருக்க வேண்டும் .**

*** நல்ல மனிதர்களை உருவாக்கி உறவாடுதல் வேண்டும் .**

*** வழிபாட்டுத்  தலங்களுக்குச்  சென்று வருதல் வேண்டும்**

*** பெரியவர்களைப்  பேணிக்காத்தல் வேண்டும் .**

*** பிள்ளைகளிடம் இருக்கும் நல்ல செயல்களை அடிக்கடி பாராட்டுதல் வேண்டும் .**

*** நிதானமாக செயல்பட வேண்டும் .**

*** குடும்பங்களுக்கிடையே ஒற்றுமை இருக்க வேண்டும் .**

*** சிறந்த பெற்றோராக இருக்க வேண்டும் .**

*** பெற்றோர்கள் பணத்தை சேமிக்க வேண்டும் .**

*** பிள்ளைகளைப்  புரிந்து நடந்துக்  கொள்ள வேண்டும் .**

# பெற்றோர்கள் தவிர்க்கப்பட வேண்டிய குணங்கள் ;

* பொறாமை குணத்தை தவிர்க்க வேண்டும் .

* மற்றவர்களைப் பற்றி புறங்கூறுவதைத் தவிர்க்க வேண்டும் .

* பெற்றோர்கள் குழந்தைகளிடம் அலட்சியம் காட்டுவதைத் தவிர்க்க வேண்டும் .

* பெற்றோர்கள் தன் பிள்ளைகளின் முன் கடுஞ்சொற்களைப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும் .

* பெற்றோர்கள் தன் பிள்ளைகளுடன் மற்ற பிள்ளைகளை ஒப்பிட்டு பேசுவதைத் தவிர்க்க வேண்டும் .

* குழந்தை விளையாடுவதற்கு தடை சொல்வதைத் தவிர்க்க வேண்டும் , ஏனென்றால் விளையாடினால்தான் குழந்தைகள் ஆரோக்கியமாக இருப்பார்கள் என்று பெற்றோர்கள் புரிந்துக் கொள்ள வேண்டும் .

* தந்தை மது அருந்துதல் ,புகைப் பிடித்தல் , போன்ற தீயப் பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும் .

* பெற்றோர்கள் தங்கள் பிள்ளையின் மனநிலையை புரிந்துக் கொள்ளாமல் இருப்பதைத் தவிர்க்க வேண்டும் .

* தேவையற்ற செலவுகளைத் தவிர்க்க வேண்டும் .

* பெற்றோர்கள் பிள்ளைகளிடம் அதிகம் கோபம் கொல்வதைத் தவிர்க்க வேண்டும் .

# பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கூறும் வழிமுறைகள் ;

பெற்றோர்கள் தன் பிள்ளைகளுக்கு நமது நாட்டின் கலைகளையும் , கலாச்சாரத்தையும் ,கற்றுக்கொடுக்க வேண்டும் .

* பெற்றோர்கள் பிள்ளைகளிடம் வரலாற்று கலைகளை சொல்லித்தர வேண்டும் .

* பிள்ளைகளுக்கு தன்னம்பிக்கையை ஊட்டுதல் வேண்டும் .

* பிள்ளைகளுக்கிடையே சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் போன்ற நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ள கற்றுத்தர வேண்டும் .

* அறிவு , ஆற்றல் ,அன்பு , ஆன்மிகம் இவற்றை ஒருங்கிணைத்தல் வேண்டும் .

* சரளமாகவும் , தன்னம்பிக்கையுடனும் ,ஆங்கிலத்தில் பேச பயிற்றுவித்தல் வேண்டும் .

* பிள்ளைகள் சரியான முறையில் சிந்திக்க பெற்றோர்கள் வழி காட்டுதல் வேண்டும் .

* தவறான எண்ணங்களை போக்க வேண்டும் .

* வெற்றிகரமான மனிதர்களை சந்திக்க வேண்டும் .

* தாழ்வு மனப்பான்மை போக்குதல் வேண்டும் .

# குழந்தை வளர்ப்பு ;

* குழந்தைகளுடன் அன்போடும் பாசத்தோடும் பழக வேண்டும் .

* குழந்தைகளின் தேவைகளை  அறிந்து  நிறைவேற்ற வேண்டும் .

* பிள்ளைகளுக்கு நம்பிக்கையுடையவராக பெற்றோர்கள் இருக்க வேண்டும் .

* போதிய அளவு சுதந்திரம் கொடுக்க வேண்டும் . தேவையற்ற செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் .

* நல்லொழுக்கத்தையும் , நல்ல பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொடுத்தல் வேண்டும் .

* குழந்தைகள் தவறு செய்தால் அவர்களை தண்டிக்க வேண்டும் .

* பிள்ளைகள் ஒளிவு , மறைவு இன்றி பேச பெற்றோர்கள் கற்றுக்கொடுக்க வேண்டும் .

* நல்ல நண்பர்களுடன் பழக்கம் வைத்துக்கொள்ளுதல் மற்றும் அவர்களை வீட்டிற்கு அழைத்து வர  பெற்றோர்கள் அனுமதிக்க வேண்டும் .

* பிள்ளைகளின் தனித்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும் .

* ஒரு காரியத்தில் தோல்வி ஏற்படும்போது அதை தாங்கி கொள்ளும் மனப்பக்குவத்தை கற்றுக்கொடுக்க   வேண்டும் .

## குழந்தைகளின் பிரச்சனைகள் ;

* தோல்விகளை ஏற்க மனம் இல்லாமல் இருப்பது

* வாழ்க்கையை பற்றிய பயம்

* தாழ்வு மனப்பான்மையுடன் இருப்பது .

* மற்றவர்களிடம் எளிதில் பழகுவது கடினம் .

* நீண்ட காலமாக திக்கித்  திக்கி பேசுதல்.

* எவ்வித காரணமுமின்றி பெற்றோர்கள் பிள்ளைகளுடன் வீணான விவாதம் செய்தல் .

* குழந்தைகளுக்கு மன  உளைச்சல் சம்மந்தமான பிரச்சனைகள் .

* சிந்திக்கும் திறன் இல்லாமல் இருப்பது .

* நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்குமா என்ற பயம் .

* சுய முடிவுகள் எடுப்பதில் குழப்பம்.

# பிள்ளைகளின் கவனத்திற்கு ;

* தனிமையை விரும்பாமல் இருக்க வேண்டும் .

* பாடப்  புத்தகங்களை மட்டுமின்றி மற்றப்  புத்தகங்களையும் படிக்க வேண்டும் .

* தேர்வை கண்டு பயம் கொள்ளாமல் இருக்க வேண்டும் .

* பெரியவரிடம் எதிர்த்துப்  பேசாமல்  இருக்க வேண்டும்

* மந்தமாக இல்லாமல் இருக்க வேண்டும் .

* எந்த பாடத்தில் பலவீனமாக இருக்கிறார்களோ, அந்த பாடத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் .

* படிப்பில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும் .

* மற்றவர்களின் ஆலோசனைகளை விரும்பிக்  கேட்க வேண்டும் .

*** பிள்ளைகள் அடிக்கடி கோபமும் ,எரிச்சலும் ,அடையாமல் இருக்க வேண்டும் .**

*** பிள்ளைகள் தன்  குடும்ப சூழலை புரிந்து கொண்டு அதற்க்கு ஏற்றவாறு செயல்பட வேண்டும் .**

# குழந்தைகள் தவிர்க்க வேண்டிய விஷயங்கள்

*** குழந்தைகள் தொலைபேசி பயன்படுத்துவதை  தவிர்க்க  வேண்டும் .**

*** பெற்றோர்களை எதிர்த்துப்  பேசுவதைத்  தவிர்க்க வேண்டும் .**

***  குழந்தைகள் பெற்றோர்கள் சொல்வதை கேட்காமல் இருப்பதைத் தவிர்க்க வேண்டும் .**

*** முடிந்த அளவிற்கு டி .வி  நிகழ்ச்சிகள் பார்ப்பதைத்  தவிக்க வேண்டும் .**

*** குழந்தைகள் கடுஞ்சொற்களைப்  பேசுவதைத்  தவிர்க்க வேண்டும் .**

*** குழந்தைகள் நேரத்திற்கு தூங்காமல் இருப்பதைத்  தவிர்க்க வேண்டும் .**

*** குழந்தைகள் விளையாட்டில் அதிக ஆர்வம் செலுத்துவதைத்  தவிர்க்க வேண்டும் .**

*** ஆசிரியர்கள் வீட்டுப்  பாடங்களைக் கொடுத்தால் அதை செய்யாமல் இருப்பதைத்  தவிர்க்க வேண்டும் .**

* குழந்தைகள் விலை உயர்ந்த பொருட்களைக் கேட்டு அடம் பிடிப்பதைத் தவிர்க்க வேண்டும் .

* நகம் மற்றும் தலை முடி அதிகம் வைத்துக்கொள்வதை தவிர்க்க வேண்டும் .

## குழந்தைகளின் பொறுப்புகள் ;

* குழந்தைகள் முறையாக அடிப்படையிலே படிக்க வேண்டும் .

* குழந்தைகள் படிப்பில் அதிக விருப்பம் கொள்ள வேண்டும் .

* குழந்தைகளுக்கிடையே அடிக்கடி சண்டைப் போடாமல் இருக்க வேண்டும் .

* காலையில் குழந்தைகள் விரைவாக எழுந்திட வேண்டும் .

* குழந்தைகள் உணவை சிந்தாமலும் மற்றும் வீணாக்காமலும் சாப்பிட வேண்டும்

* குழந்தைகள் வெளியே செல்லும்போது கவனமாக சென்று வருதல் வேண்டும் .

* சரியான நேரத்திற்குப் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டும் .

* குப்பைகளைப் பொது இடங்களில் போடாமல், குப்பைத் தொட்டிகளில் போட வேண்டும் .

* பெற்றோர்களை நன்றாகக் கவனித்துக்கொள்ள வேண்டும் .

## குடும்ப பிரச்சனைகளுக்குத்  தீர்வு ;

* ஒரு குடும்பத்தில் சகிப்புத்தன்மை ,விட்டு கொடுத்தல் ,தியாகம் , ஆகியவை இருக்க வேண்டும் .

* எதையும் சிந்தித்து செயல்படும் தன்மை இருக்க வேண்டும் .

* குடும்பத்தில் அமைதியைப் பின்பற்ற வேண்டும் .

* எதற்கும் கவலைக்கொள்வதை தவிர்த்து பயமின்றி ஒரு உயர்ந்த குறிக்கோளை மனதில் வைத்துக்கொள்ள  வேண்டும்

* கணவன் ,குழந்தை , பெற்றோர் ,உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இவர்களின் மீது அன்பை செலுத்த வேண்டும் .

* எல்லோரிடமும் மதிப்புடன் இருக்க வேண்டும் .

* சுருக்கமாக பேச கற்றுக்கொள்ள வேண்டும் .

* நல்லதையே நினைத்து நல்லதையே செய்ய வேண்டும் .

*  மனதிருப்திக்காக  சுற்றுலா சென்று வருதல் வேண்டும் .

* குழந்தைகள் செய்யும் குற்றத்தை பெரிதுபடுத்தாமல் இருக்க வேண்டும் .

## முதியவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் ;

* ஒவ்வொரு மனிதனும் சிறந்த விஷயங்களை பெரியவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் .

* முதியவர்களிடமிருந்து நாட்டு புற  கலைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும்

* உயர்வான எண்ணங்களை கற்றுக்கொள்ளுதல் வேண்டும்

* ஆரோக்யமான உணவுகளை உண்ண கற்றுக்கொள்ள வேண்டும்

* முதியோர் இளையோருக்கு வாழ்ந்துக்காட்டும் ஒரு முன் உதாரணமாக இருக்க வேண்டும் .

* நாட்டுமருத்துவத்தை  கற்றுக்கொள்ள வேண்டும்

* நல்ல பேச்சுத் திறனைக் கற்றுக்கொள்ள வேண்டும் .